# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1864/38 - 2014 මැයි මස 28 වැනි බදාදා - 2014.05.28

*1864/38 ஆம் இலக்கம் – 2014 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ( இ. ச. வா. 423 ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்**

இலங்கைக்கு வெளியேயுள்ள வங்கிகளில் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்குமான அனுமதி

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 48 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய பிரிவு 6அஅ மற்றும் பிரிவு 8 இன் (1) ஆம் துணைப் பிரிவுகளினால் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் இலங்கையிலுள்ள அல்லது வதியும் ஆள் மற்றும் இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள கம்பனிகள் அல்லது நிறுவனங்கள் இலங்கைக்கு வெளியேயுள்ள எந்தவொரு வங்கியிலும் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் தொழிற்படுத்துவதற்கும் அல்லது எந்தவொரு வெளிநாட்டு வங்கியிலுமுள்ள அத்தகைய கணக்குகளை மூடுவதற்கும் கீழே குறித்துரைக்கப்பட்டவாறு இத்தால் பொதுவான அனுமதி வழங்கப்படுகிறது.

2. இத்தால் வழங்கப்பட்டுள்ள அனுமதி கீழ்க்காணும் நபர்களுக்கு ஏற்புடையதாகும் :

(i) வியாபாரம், கல்வி அல்லது மருத்துவ நோக்கங்களுக்காக இலங்கைக்கு வெளியே தற்காலிகமாக சென்றிருக்கும் இலங்கையில் வதியும் ஆளொருவர் ;

(ii) இலங்கைக்கு வெளியே தொழில்சார் நிபுணத்துவம் அல்லது தொழில் பயிற்சி பணிகளை வழங்குகின்ற தனிப்பட்ட ஒருவர் அல்லது இலங்கையில் பதிவு செய்யப்பட்டிருக்கும் கம்பனியொன்று அல்லது நிறுவனம் ;

(iii) இலங்கைக்கு வெளியே முதலீடு செய்வதற்கு நிதி அமைச்சரினால் அனுமதிக்கப்பட்டுள்ள தனிப்பட்ட ஒருவர் அல்லது இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள கம்பனியொன்று அல்லது நிறுவனமொன்று ;

(iv) வணிகப் பொருட்களை ஏற்றுமதி செய்யுமொருவர் ;

(v) வேறொரு நாட்டினது செல்லுபடியாகும் நிரந்தர வதிவிட அனுமதி பெற்ற ஒருவர் ;

(vi) இரட்டை குடியுரிமையுடையவர் ; மற்றும்

(vii) விசா வழங்கும் அதிகாரசபையானது மாணவர் விசாவினை வழங்குவதற்கு தங்கள் நாட்டின் வங்கியில் கணக்கொன்றினைத் திறந்து பேண வேண்டும் என்ற நிபந்தனையை விடுவிக்குமிடத்து, அத்தகைய நாட்டிற்கு கல்வி நோக்கத்திற்காக இலங்கையிலிருந்து செல்ல உத்தேசித்துள்ள இலங்கையில் வதியும் நபர் ஒருவர்.

3. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி, இலங்கைக்கு வெளியே சட்ட ரீதியாகக் கிடைக்கப்பெற்ற அல்லது ஈட்டிய அல்லது கணக்கு வைத்திருப்பவரின் அனுமதிக்கத்தக்க வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களுக்காக இலங்கையிலுள்ள அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் அல்லது அனுமதியளிக்கப்பட்ட ஆளிடமிருந்து பெற்ற வெளிநாட்டு நாணயத்தினை இக்கணக்குகளில் வரவு வைக்கலாம் :

4. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி இலங்கையில் வதியும் ஆளொருவருக்காக கணக்கு வைத்திருப்பவரின் ஏதேனும் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களுக்காக இக்கணக்கிலுள்ள நிதியங்களைப் பயன்படுத்த முடியும்.

5. கீழேயுள்ள பந்தி 6 இன் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு, இத்தால் வழங்கப்பட்ட அனுமதிக்கிணங்க வெளிநாட்டு வங்கிகளில் திறக்கப்பட்டு பேணப்பட்டு வரும் கணக்கொன்று மூடப்படுமிடத்து கணக்கிலுள்ள மீதி அத்தகைய கணக்கு மூடப்பட்டதிலிருந்து ஒரு மாதத்திற்கிடையில் வங்கித்தொழில் வழிப்படுத்தல்களினூடாக இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுதல் வேண்டும்.

6. பந்தி 2 இன் vii ஆவது விடயத்திலுள்ள நிபந்தனைகளுக்கிணங்க, இலங்கைக்கு வெளியில் கணக்கினைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் அனுமதிக்குமிடத்து அத்தகைய நாட்டினால் மாணவர் விசா நிராகரிக்கப்பட்டு அல்லது மாணவர் விசாவினைப் பெற்ற பின்பு கல்வியை மேற்கொள்ளாது விடத் தீர்மானிக்குமிடத்து, இந்த அனுமதியின் கீழ் இலங்கைக்கு வெளியில் திறக்கப்பட்ட கணக்கின் வரவுகளிலிருக்கும் அனைத்து நிதிகளும் அத்தகைய தீர்மானம் எடுத்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்கு சொந்த நாட்டிற்கு திருப்பி அனுப்புதல் வேண்டும்.

7. சந்தர்ப்பம் வேறு விதத்தில் தேவைப்படுத்தினாலன்றி, இவ்வறித்தலில் -

(i) "அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்" என்பது செலாவணி கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதே கருத்தினைக் கொண்டிருக்கும் ;

(ii) "அனுமதியளிக்கப்பட்ட ஆளொருவர்" என்பது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் மத்திய வங்கியினால் தற்போதைக்கு அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள் எனப் பொருள்படும் ;

(iii) "வெளிநாட்டு நாணயம்" என்பது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதே கருத்தினைக் கொண்டிருக்கும் ;

(iv) "இலங்கையில் வதியும் ஆளொருவர்" அல்லது "இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவர்" என்பது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 37 (i) ஆம் பிரிவின் கீழ் நிதியமைச்சரினால் விடுக்கப்பட்ட பணிப்பிலும், 1972, ஏப்பிறல் 21 ஆந் திகதியிடப்பட்ட இல. 15,007 கொண்ட அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பணிப்புரையிலும் வழங்கப்பட்டுள்ள அதே கருத்தினைக் கொண்டிருக்கும்.

8. 2010, மாச்சு 11 ஆந் திகதியிடப்பட்ட இல. 1644/26 மற்றும் 2013, யூன் 23 ஆந் திகதியிடப்பட்ட இல. 1814/40 இனைக் கொண்ட அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட சட்டத்தின் பிரிவு 48 உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 6அஅ மற்றும் பிரிவு 8 இன் (1) ஆம் துணைப் பிரிவுகளில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்கள் இத்தால் நீக்கப்படுகின்றன.

பி. எச். ஓ. சந்திரவன்ச,
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்.

இலங்கை மத்திய வங்கி,
கொழும்பு,
2014, மே 28

6- 342

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.